DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Sessions Judge,
Mahalir Neethimandram, Madurai.

| | |
|---|---|
| Sessions Case | - S.C **No.358/2016** |
| Deposition of witness for | - P.W.4 |
| Name | - Azhagusundaram |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.11.2021

**முதல் விசாரணை:**

நான் தற்போது பேரையூர் தாலுகா, பழையூரில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியாது. பேப்பரில் பார்த்துதான் தெரிந்து கொண்டேன். கடந்த 2015ஆம் வருடம் காலை 11.00, 12.00 மணி அளவில் முக்குச்சாலை ஆந்திரா டீஸ்டாலில் டீ குடித்துக் கொண்டிருந்தேன். சிவப்பு நிற கார் வந்தது. அதில் இருந்து 2 பேர் இறங்கி டீ சாப்பிட்டு கொண்டிருந்தார்கள். அப்போது யாரோ ஒருவர் காரை எடுத்துக் கொண்டு போய் விட்டார். அந்த இறங்கிய 2 பேர் கேரளாகாரர்கள். அவர்கள் மிகுந்த பதட்டத்துடன் காவல் நிலையம் எங்கே இருக்கிறது என்று கேட்டார்கள். நான்தான் அவர்களை கூட்டிக் கொண்டு பேரையூர் காவல் நிலையத்தில் கொண்டு போய் விட்டேன். அவர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். பின்பு நான் வீட்டுக்கு போய் விட்டேன். மறுநாளோ அல்லது அடுத்த நாளோ காலையில்தான் செய்தித்தாளில் 2 பேரை பிடித்ததாக பார்த்தேன். அந்த காருக்குள் ஒரு பெண் இருந்ததாக இறங்கிய 2 பேர் சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு கு.வி:**

காவல் நிலையம் சென்றவுடன் நான் யார் என்றும், யாரை கூட்டி வந்தேன் என்று கேட்டார்கள். என்ன விபரம் என்று என்னிடம் கேட்கவில்லை. நான் கூட்டி சென்றவர்களிடம் கேட்டார்கள். என் பெயர், விலாசம் கேட்டார்கள். என்னிடம் எந்த கையெழுத்தும் வாங்கவில்லை. நான் கேரளாக்காரர்களை நான் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லவில்லை என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் சம்பவம் நடந்த நேரம் 12.30 என்று நான் சொல்லவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை.